www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# சிவகுமாரன் போட்ட விதை! பிரபாகரன் வைத்த குறி!!

அரசியல் தொடர்..... 2

அற்புதன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

## தியாகராசாவின் புத்தி

கொழும்பில் வைத்து தன்னைக் கொலைசெய்யும் துணிச்சல் தமிழ் இளைஞர்களுக்கு ஏற்படாது என்றுதான் வட்டுக்கோட்டை பா.உ.தியாகராசா நினைத்திருந்தார்.

அதனால்தான் முன்பின் அறிமுகமில்லாத இரு இளைஞர்கள் பத்திரிகை ஒன்றின் பெயரைச் சொல்லி பேட்டி கேட்டபோது சந்திக்கச் சம்மதித்தார். ஆனாலும், முதல் அனுபவம் என்பதால் இளைஞர்கள் இருவரதும் நடவடிக்கைகளில் தியாகராசாவுக்கு சந்தேகம் ஏற்பட்டுவிட்டது.

கதவருகில் நின்ற இளைஞர் கைத்துப்பாக்கியை உருவிக்கொண்டதை கண்ட தியாகராசா உசாராகி விட்டார்.

மரணதூதன் எதிரே நிற்கும் உணர்வில் எப்படியாவது தப்பித்தாக வேண்டுமே என்று உள் மனம் உந்த தரை நோக்கிக் குனிந்தார்.

அச்சமயம் கதவருகில் நின்ற இளைஞரோ தியாகராசாவின் அருகில் நின்ற தனது சகாவான இளைஞரை "திசை இங்கே வா" என்று அவசரமாக குரல் கொடுத்தார்.

பயிற்சியும் இல்லை; கைத்துப்பாக்கியும் உள்ளூர் தயாரிப்பு.

வெடிக்கலாம். ரவையை துப்பாமலும் அடம்பிடிக்கலாம். தவிர, தான் சுடுவது தப்பித்தவறி சகாவுக்கும் பட்டுத் தொலைத்துவிடலாம் என்ற பயம் வேறு.

'திசை' என்று அழைக்கப்பட்ட இளைஞர் கதவை நோக்கி ஓட, கதவருகில் நின்ற இளைஞர் தியாகராசாவை குறி வைத்து விசையை அமுக்க, அதே தருணத்தில் தரையை நோக்கி குனிந்த தியாகராசா அபயக்குரல் எழுப்பியபடி தரைவிரிப்பின் முனையில் பிடித்து இழுத்தார்.

தியாகராசா குனிந்ததும், தரைவிரிப்பு இழுக்கப்பட்டதால் அதன் மறுமுனையில் நின்ற இளைஞர் தனது சமநிலை தவறிய நிலையில் சுட நேர்ந்ததும் குறி தவறக் காரணமாயின.

துப்பாக்கிரவை சுவரில் பாய்ந்தது. திட்டம் தோல்வியாகிவிட்டதை உணர்ந்து இரு இளைஞர்களும் தப்பி ஓடினார்கள்.

அவர்கள் இருவரும் தனியார் வாகனமொன்றை வாடகைக்கு அமர்த்தியே வந்திருந்தனர்.

வெடிச்சத்தமும், அபயக்குரலும் சிங்களவரான வாகனச் சாரதிக்கு விபரீதத்தை தெரியப்படுத்திவிட, ஓடிவந்த இளைஞர்களைக் கண்டதும் வாகனச் சாவியை வீசி எறிந்து விட்டு சாரதி ஓடிவிட்டார்.

பின்னர் எப்படியோ இரு இளைஞர்களும் தப்பிக் கொண்டார்கள்.

ஒருவர் திசைவீரசிங்கம். மற்றவர் ஜீவன் அல்லது ஜீவராசா.

அவர்களை திட்டத்தோடு அனுப்பி வைத்தது தமிழ் மாணவர் பேரவைத் தலைவர் பொன்.சத்தியசீலன். இந்த மூவரும் இப்போது வெளிநாட்டில் உள்ளனர்.

## அனுப்பி வைப்பார் வரமாட்டார்

சத்தியசீலன் பற்றி அவரோடு இருந்தவர்கள் சொல்லும் விமர்சனம் இது: "அவர் யாரைச் சுட வேண்டும் என்று சொல்லி அனுப்பி வைப்பார். எந்த நடவடிக்கையிலும் தான் மட்டும் பங்குகொள்ள மாட்டார். பொலிசார் விசாரிக்கும் போது ஆதியோடு அந்தம்வரை சொல்லிவிடுவார்.

'சிறைமீண்ட செம்மல்' என்று அழைக்கப்பட்ட சத்தியசீலன் ஜெர்மனுக்கு கொள்கை விளக்கமளிக்க அழைப்பு வந்துள்ளதாகக் கூறிச் சென்றவர்தான்– திரும்பி வரவேயில்லை.

கூட்டணித்தலைவர்களால் உணர்ச்சிகரமாகத் தூண்டிவிடப்பட்ட 'துரோகிகள் ஒழிப்பு' படலத்தில் முதலில் குறிவைக்கப்பட்ட அரசியல்வாதியான தியாகராசா தப்பிக் கொண்டார். (பின்னர் 1981ம் ஆண்டு இவர் வட்டுக்கோட்டையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். புளொட் அமைப்பே கொலைக்குக் காரணம் என்று நம்பப்பட்டது) அவர் 1977ம் ஆண்டு தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

தியாகராசா உயிர்தப்பிய போதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் மற்றும் அருளம்பலம், சி.எக்ஸ்.மார்டின், குமாரசூரியர், ராஜன் செல்வநாயகம், போன்ற பா.உக்களும் யாழ் மேயர் அல்பிரட் துரையப்பாவும் தமக்கும் குறிவைக்கப்படலாம் என்று உணர்ந்தேயிருந்தனர்.

ஆனாலும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களால் யார் கடுமையாக வசைபாடப்படுகிறார்களோ அவர்களே உடன் ஒழிக்கப்பட வேண்டியவர்கள் பட்டியலில் முதலிடம் பெறுவார்கள்.

## துரையப்பாவின் இரு பக்கங்கள்

யாழ் மேயராக இருந்த அல்பிரட் துரையப்பாவுக்கு இரு பக்கங்கள் உண்டு.

தமிழ் பேசும் மக்களது அரசியல் அபிலாசைகள் பற்றிய கோரிக்கைகளை அவர் அலட்சியம் செய்தார்.

அதன்மூலமாக தமிழர்களுக்கு எதிரானவராக தான் சித்தரிக்கப்படுவதையிட்டு அவர் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அப்போது பிரதமராக இருந்தார். அவரிடம் தனது சொல்லுக்கு மதிப்பிருப்பதாக காட்டிக் கொள்ளுவதில் அவர் கவனம் செலுத்தினார். இது அவரது ஒருபக்கம்.

யாழ் நகரை அழகுபடுத்துவது, நவீனப்படுத்துவது என்பவற்றில் தனக்கு முன்னும் பின்னும் வந்த நகரமுதல்வர்களைவிட துரையப்பாவே ஆர்வத்தோடு செயற்பட்டார்.

யாழ் நகரில் வள்ளுவருக்கும் ஔவையாருக்கும் சிலைகள் நிறுவினார்.

யாழ் நகரில் உள்ள நவீன சந்தைக் கட்டிடம் துரையப்பாவின் முயற்சியால் உருவாக்கப்பட்டதாகும்.

யாழ் நகரில் நவீன விளையாட்டரங்கும் உருவாக்கப்படவும் துரையப்பாவே ஏற்பாடு செய்தார்.

கூட்டுறவுச் சங்கங்களில் துரையப்பாவின் மூலமாக நூற்றுக்கணக்கானோர் வேலைவாய்ப்புப் பெற்றார்கள். இது அவரது மறுபக்கம்.

ஆனால் இவற்றையெல்லாம் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கேலிசெய்தனர்.

## சோறா சுதந்திரமா?

'தன்மானத் தமிழனுக்கு சோற்றைவிட சுதந்திரமே முக்கியம்.'

'தமிழ் ஈழம் கிடைத்த பின்னர் நவீன சந்தைகளை நாமே உருவாக்கிக் கொள்ளலாம்' என்றனர்.

'கூப்பன் கள்ளன்' என்றும் அவர் கேலி செய்யப்பட்டார்.

இதற்கிடையே துரையப்பா மீது இளைஞர்களுக்கு கடும் சினம் ஏற்படக்கூடிய வகையில் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு அமைந்தது.

1974ம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடந்தது.

இந்த மாநாடு மூலம் கூட்டணியினர் அரசியல் லாபம் அடைந்துவிடுவார்கள் என்று துரையப்பா நினைத்தார்.

அதனால் மாநாடு நடைபெறுவதை தடுக்கவும், அதையும் மீறி நடந்தபோது இடையூறாக இருக்கவும் முற்பட்டார்.

சகல தடைகளையும் மீறி மக்கள் வெள்ளத்தின் மத்தியில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டின் கண்கொள்ளாக் காட்சி துரையப்பாவுக்கு வயிற்றெரிச்சலை கொடுத்தது. யாழ் நகரெங்குமே விழாக் கோலம் பூண்டு எங்கும் தமிழ் முழக்கம் கேட்ட அந்த நாட்களில் ஒருநாள் துப்பாக்கி வேட்டொலிகள்!

திரண்டிருந்த மக்கள் சிதறியோடினார்கள். தேமதுரத் தமிழோசை கேட்கவந்த 9 தமிழர்கள் செத்துப்போனார்கள்.

வேட்டோசை எழுப்பி பொலிசார் நடத்திய அட்டூழியத்தை அன்றைய அரசு மூடிமறைக்கப் பார்த்தது.

மின்சார வயர்களை மிதித்ததும் கூட்ட நெரிசலும் சாவுக்கு காரணம் என்பதுபோல் விளக்கம் சொல்லப்பட்டது.

தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசு மீதும் துரையப்பா மீதும் இளைஞர்களது கோபாவேசத்தை வளர்த்துவிட்டன.

கல்வியில் தரப்படுத்தல் கொள்கை, **தமிழரசு– நமக்கொரு தனியரசு வேண்டும்** என்ற சிந்தனைக்கு நீர்வார்த்தது.

தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் **'ஆயுதம் ஏந்தாமல் விமோசனம் இல்லை'** என்ற சிந்தனைக்கு கொம்பு சீவிவிட்டது.



ஆயுதம் ஏந்தி முதல் பலியான போராளி சிவகுமாரன்



உரும்பிராயில் வைத்து புலிகளால் கொல்லப்பட்ட ந.நடராசா இவர்தான்.

படுகொலைக்கு காரணமான பொலிஸ் அதிகாரி சந்திரசேகராவுக்கும் துரையப்பாவுக்கும் குறிவைத்து சிவகுமாரன் தலைமையில் சில இளைஞர்கள் நேரம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணம் கைலாசநாதர் கோவில் அருகில் வைத்து பொலிஸ் அதிகாரி சந்திரசேகராவின் கார் சிவகுமாரன் குழுவினரால் வழி மறிக்கப்பட்டது.

கார் கதவை திறந்த சிவகுமாரன் சந்திரசேகரா மீது கைத்துப்பாக்கியால் சுட்டார். ஆனால் கைத்துப்பாக்கி சிவகுமாரனை கைவிட்டது– இயங்க மறுத்தது. உள்ளூர் தயாரிப்பு உருப்படியாக இல்லை.

பல்வேறு முறை மேற்கொள்ளப்பட்ட கொலைமுயற்சிகளில் இருந்து சந்திரசேகரா தப்பினார்.

அதே வேளை பொன்னாலை பாலத்தில் வைத்து துரையப்பாவைக் கொல்ல சிவகுமாரன் போட்ட திட்டமும் பலிக்கவில்லை.

பொன்–சிவகுமாரன் உரும்பிராயைச் சேர்ந்தவர். ஆயுதம் ஏந்துவது ஒன்றே தமிழர்கள் விடுதலைக்கு வழி என்று உறுதியாக நம்பியவர்.

துரோகிகள் ஒழிப்புத்தான் அவரது முதல் குறியாக இருந்தது. எனினும் அதில் அவர் வெற்றிபெறவில்லை.

1974ம் ஆண்டு ஜுலை 5ம் திகதி கோப்பாய் வங்கிக் கொள்ளை முயற்சியில் கைதானபோது விஷம் அருந்தித் தற்கொலையானார்.

தற்கொலை கலாசாரத்திற்கு கால்கோள் நாட்டியவர் சிவகுமாரன்தான்.

பொலிசாரின் தீவிர தேடுதல் வேட்டை காரணமாக சில காலம் தமிழ்நாட்டில் தங்கியிருந்துவிட்டு வருவதற்கு சிவகுமாரன் திட்டமிட்டார்.

கடல் வழியாக தப்பிச் செல்ல சிவகுமாரனுக்கு பணம் தேவைப்பட்டது.

ஐயாயிரம் ரூபா தந்துதவுமாறு அன்றைய கோப்பாய் பா.உ. கதிரவேற்பிள்ளையிடம் கேட்டிருந்தார்.

உதவ ஒப்புக்கொண்ட கதிரவேற்பிள்ளை கடைசியில் கைவிரித்துவிட்டார்.

அப்போது கதிரவேற்பிள்ளைக்கு 'சிந்தனைச்சிற்பி' என்று பட்டம் இருந்தது.

சிந்தனைச் சிற்பிக்கு சிவகுமாரனை காக்கும் சிந்தனையே இல்லாமல் போனதால், சிவகுமாரன் குழுவினர் கோப்பாய் வங்கியில் குறிவைத்தனர்.

கொள்ளை முயற்சி தோல்வியடைந்தது. தப்பி ஓடிய சிவகுமாரும் ஏனையோரும் பொலிசாரின் சுற்றிவளைப்பில் சிக்கினார்கள்.

சிவகுமாரன் ஓடிப் போய் பதுங்கியிருந்த இடம் பற்றி பொலிசாருக்கு தகவல் சொன்னவன் பெயர் ந.நடராசா.

(உரும்பிராய் பெற்றோல் நிலைய முகாமையாளரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளருமான ந.நடராசா 2.7.1978 அன்று புலிகளால் கொல்லப்பட்டார்)

சிவகுமாரின் முயற்சிகள் தோல்வியில் முடிந்தபோதும் அது ஆற்றலின்மையின் வெளிப்பாடு அல்ல. முன் அனுபவமற்ற எந்தவொரு நடவடிக்கையும் அப்படித் தான் ஆரம்பமாகும்.

## சிவகுமாரன் போட்டீது விதை

சிவகுமாரின் மரணச் சடங்கில் கடல் அலையாக மக்கள் கண்ணீர் வெள்ளம்.

'எங்கள் பொடியளாவது ஆயுதம் ஏந்துவதாவது' என்று நினைத்தவர்கள் கூட காலம் மாறத்தொடங்கி விட்டது என்பதைக் கவனத்தில் கொண்டனர்.

மரணவீட்டில் முன் வரிசையில் நின்றவர்கள் இன்றுவரை தம்மை அகிம்சைவாதிகள் என்று கூறிக்கொள்ளும் கூட்டணித் தலைவர்கள் தான்.

அது தவிர ஆவேசமாக அஞ்சலிக் கூட்ட உரைகளும் நிகழ்த்தினார்கள்.

'இந்திய சுதந்திரப் போராட்ட தியாகி பகவத்சிங் மாதிரித்தான் தம்பி சிவகுமாரனும்' என்றார் தலைவர் அமிர்.

கூட்டத்தில் சிந்தனைச் சிற்பி கதிரவேற்பிள்ளையும் கலந்துகொண்டு சிவகுமாரன் பற்றி புகழ மறக்கவில்லை!

கூட்டணியின் குரலாக அன்று வெளிவந்த 'சுதந்திரன்' பத்திரிகை சிவகுமாரன் புகழ்பாடியது.

உரும்பிராயில் சிவகுமாரனுக்கு சிலை ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது.

அந்தச் சிலையை திறந்து வைத்தவர் தமிழ் ஈழ விடுதலை இயக்க தலைவர் முத்துக்குமாரசாமி. (தற்போதைய ரெலோ அல்ல அது)

அகிம்சையே எம் வழி என்று சொன்ன கூட்டணித்தலைவர்கள் சிவகுமாரன் பாதை தவறு என்று ஒரு நாளும் சொன்னதில்லை.

மகாத்மா காந்தி, பகவத்சிங் பற்றி விமர்சித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவகுமாரனின் மரணம் ஆயுதப் போராட்ட எண்ணத்திற்கு நெய் வார்த்தது.

சிவகுமாரனால் குறிவைக்கப்பட்டு தப்பிய துரையப்பா 1975 ஜுலை 27ம் திகதியன்று யாழ்ப்பாணம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு முன் வந்திறங்கினார்.

அங்கு துரையப்பாவின் வருகைபற்றிய தகவல் அறிந்து நான்கு இளைஞர்கள் காத்திருந்தனர்.

பிரபாகரன், கலாபதி, கிருபாகரன், பற்குணராஜா ஆகியோரே அந்த நால்வர்.

துரையப்பா காரிலிருந்து இறங்கியதும் இளைஞர்களில் ஒருவர் முன்னால் வந்து 'வணக்கம் ஐயா' என்றார்.

**(தொடர்ந்து வரும்)**

## அது இவர்தான்





பஸ்தியாம்பிள்ளை கொலை தொடர்பாக தேடப்பட்ட தமிழ் இளைஞர்களது படங்கள் சுவரொட்டி மூலமாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் 1978ல் வெளியிடப்பட்டன. துரையப்பா கொலை முதல் பஸ்தியாம்பிள்ளை குழுவினர் கொலை வரை தேடப்பட்ட பிரபாகரனின் சிறுவயதில் எடுக்கப்பட்ட புகைப்படம் மட்டுமே புலனாய்வுத்துறையினரிடம் சிக்கியது. வீட்டிலிருந்த தனது புகைப்படங்கள் அனைத்தையும் முன்கூட்டியே பிரபாகரன் எடுத்துச் சென்றுவிட்டார். தேடப்பட்ட இளைஞர்களில் மாவை சேனாதிராஜா, வண்ணை ஆனந்தன், கல்லாறு நடேசானந்தன், புஸ்பராஜா, சபாலிங்கம் (கடந்த மே மாதம் 1ம் திகதி பாரிசில் கொல்லப்பட்டவர்) போன்றோர் பொலிசாரிடம் சரணடைந்தனர்.

பிரபாகரன், சிறிசபாரத்னம் போன்றோர் சரணடையவில்லை.

துரையப்பா கொலையில் பிரபா நேரடியாக பங்கேற்றிருந்தார். சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை குழுவினர் கொல்லப்பட்டதில் பிரபா பங்கேற்கவில்லை.

## எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி

மாகியிருக்கிறது என்று அர்த்தம்.

பேச்சு நடத்த யாழ் சென்ற அரச தூதுக்குழுவை வரவேற்க திரண்ட மக்கள் புலிகளது காவல்துறையினரது தலைத் தொப்பிகளையும் தட்டி விழுத்தித் தடைக்குப் போட்டிருந்த மரக்கட்டை தடுப்புக்களையும் மீறிக் கொண்டு ஆரவாரம் செய்தனர். கரம் அசைத்தனர்.

இனப்பிரச்சனைக்கு நேர்மையான அரசியல்தீர்வு காணப்படவேண்டும். போர் முடிவுக்கு வரவேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்புமளவுக்கு தமிழீழக் கோரிக்கையை அவர்கள் கைவிடமுடியாத, கைவிடக்கூடாத ஒன்றாக நினைக்கவில்லை என்று தெரிகிறது.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்பது மக்களின் கோசமாக இல்லாமல் ஒரு குறிப்பிட்ட இயக்கத்தின் கோசமாக மட்டுமே இருப்பதுதான் இன்றைய நிலை.

இவ்வாறான ஒரு நிலையில் திருமதி சந்திரிக்கா இனப் பிரச்சனையை தீர்க்கும் ஆணையை சிங்கள மக்களிடம் பெற்றுக் கொள்வதை– அதுவும் அமோகமாக பெற்றுக் கொள்வதை புலிகள் விரும்பியிருக்க முடியுமா?

ஊகங்களையும், மன விருப்பங்களையும் சார்ந்து பதிலளிக்காமல் சம்பவங்கள், செயல்கள் மூலமாக விடைதேடும் போது புலிகள் விரும்பியிருக்கவில்லை என்றே தெரிகிறது.

காமினி கொலை பற்றிய மௌனமும், வெற்றிலைக்கேணியில் நவம்பர் 8ல் நடந்த கரும்புலித் தாக்குதலும் திருமதி சந்திரிக்காவின் கரத்தைப் பலப்படுத்தும் அக்கறையைத் தெரிவிக்கும் செய்திகளல்ல.

புலிகளின் தரப்பில் இருந்து இதனை நோக்கும்போது அவர்களது சாணக்கிய தந்திரமாக மதிப்பிடலாம்.

எந்தவொரு தரப்பும் தனது எதிர்த்தரப்பு பலமாகவேண்டும் என்று விரும்பாது. விரும்பும் பலமாக உதவும் என்றும் எதிர்பார்க்க முடியாது.

திருமதி சந்திரிக்கா அமோக வெற்றி பெற்றமை ஒரு முக்கிய அரசியல் நிகழ்வு.

ஆனால், நவம்பர் 10ம் திகதி முடிவுகள் வெளியாகியபின்னர் நவம்பர் பதினைந்தாம் திகதி– இதனை எழுதும்வரை– புலிகள் தரப்பிலிருந்து திருமதி சந்திரிக்காவுக்கு ஒரு வாழ்த்துச் செய்திகூட அனுப்பப்படவில்லை.

உடனடியாக வாழ்த்துச் செய்தி அனுப்ப வசதியில்லை என்று கருதமுடியாது. இருக்கவே இருக்கிறது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம். கையோடு 'ஃபக்ஸ்' சாதனம்.' உடனடியாக ஜனாதிபதி அலுவலகத்திற்கு கிடைக்க வழி செய்துவிடுவார்கள்.

ஆனால் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாகி ஒரு வாரமாகியும் புதிய ஜனாதிபதியை புலிகள் வரவேற்கவில்லை.

திருமதி சந்திரிக்காவை புலிகள் நம்புகிறார்கள் என்றால் அவரது வெற்றிச் செய்தி இனிப்பான செய்தியாக அவர்கள் செவியில் விழுந்திருக்க வேண்டும்.

அதிர்ச்சியாக இருந்தால்தான் அதனை ஜீரணிக்க அவகாசம் தேவைப்படும்.

புலிகளின் மௌனமும், அமோக வெற்றி குறித்து ஒரு வாரமாக கருத்து வெளியிடாத போக்கும் எதிர்தரப்பின் அமோக அரசியல் பலம் அவர்களுக்கு அதிர்ச்சிதான் என்றே தெரிகிறது.

இவற்றின் பின்னணியில்தான் அடுத்த நகர்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அவை எப்படி அமையப்போகின்றன என்பதை வரும் வாரங்களில் இரு தரப்பின் நடைமுறைகளை வைத்து நோக்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்